

# உங்கள் எதிர்காலத்தை வெளிப்படுத்தும் பழமையான தீர்க்கதரிசனங்கள்!

இதுவரை கேட்டிராத

மிகச்சிறந்த செய்தி!

உங்களை பாதிக்கும் உண்மைகள்!

**அற்புதமான ஓர் உண்மை:** 2008ன் பொருளாதாரப் பின்னடைவிற்குப் பின் அமெரிக்காவின் பொருளாதாரம் மீண்டும் எழுச்சியடைந்தபோது, கைரேகை ஜோதிடம், அதாவது ஒரு நபருடைய கை ரேகைகளை வைத்து அவருடைய எதிர்காலத்தைக் கணிக்கும் தேவை அதிகரித்தது. மேலும், 2018ல், உளவியல் ஆற்றலுள்ள நபர்கள் மற்றும் குறிசொல்லுபவர்களையும் சேர்த்து ஆவிமார்க்கத்திற்காக மட்டும் அமெரிக்கர்கள் இரண்டு பில்லியன் டாலர்கள் செலவழித்தார்கள்.

ஆனால் சந்தேகத்திற்கிடமின்றி வேதம் உங்கள் எதிர்காலத்தைக் கணிக்கும் இப்படிப்பட்ட நபர்களைத் தெரிந்துகொள்வதைக் குறித்து எச்சரிக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா? "அஞ்சனம்பார்க்கிறவர்களை நாடி, குறிசொல்லுகிறவர்களைத் தேடாதிருங்கள்; அவர்களாலே தீட்டுப்படவேண்டாம்." (**லேவி. 19:31**). எனவே, அடுத்தமுறை ஏதேனும் குறிசொல்பவர்களுடைய இடத்தைக் கடந்துசெல்லும்போது, உங்களுடைய பணத்தை விரயம் செய்யாமல் சேமியுங்கள்!

ஆனால் எதிர்காலத்தைக் குறித்து தெரிந்துகொள்வதில் ஒரு பாதுகாப்பான வழி உள்ளது! கடந்த காலத்தில் என்னவெல்லாம் நடந்தன என்றும், சீக்கிரத்தில் இவ்வுலகத்தில் என்ன நடக்கப்போகிறது என்பதைக் குறித்த துல்லியமான தீர்க்கதரிசனங்களால் வேதாகமம் நிறைந்துள்ளது. மேலும், இது எந்த வகையில் உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் அர்த்தமுள்ளதாயிருக்கும் என்பதையும் தெரிவிக்கிறது. சொல்லப்போனால், வேதாகமத்தைக்காட்டிலும் வேறு எந்தப் புத்தகத்திலும் நிறைவேறின தீர்க்கதரிசனங்கள் கிடையாது! எனவேதான், இவ்வுலகத்தில் உள்ள வேறு எந்தக் காரியத்தைக் காட்டிலும் தேவனுடைய

வார்த்தையை நீங்கள் அதிகமாக நம்பலாம்.

***வேதம் உண்மையானதுதான் என்பதற்கு சாட்சிபகரும் ஆறு நிறைவேறின தீர்க்கதரிசனங்கள் இதோ!***

## 1 ராஜ்யங்கள் எழும்பும் ராஜ்யங்கள் விழும்

ஏறத்தாழ 2500 ஆண்டுகளுக்கு முன், பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்கு பொன்னினாலான தலையும், வெள்ளியினாலான மார்பும், வெண்கலத்தாலான தொடைகளும், இரும்பினாலான கால்களும், பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாக இருந்த ஒரு மாபெரும் சிலையைக் குறித்த சொப்பனத்தை தேவன் கொடுத்தார். சொப்பனத்தின் முடிவில், ஒரு பெரிய கல் ஒன்று அந்தச் சிலையை நொறுக்கித் தள்ளிற்று. சொப்பனத்தினால் ராஜா கலக்கமடைந்தார், அவருடைய ஞானிகளால் அதற்கான விளக்கத்தைக் கொடுக்கமுடியவில்லை.

ஆனால் எபிரெய அடிமையான தானியேல் தேவனால் ஞானம் அருளப்பட்டு சொப்பனத்தின் அர்த்தத்தை விளக்கினான். அந்த சிலையானது பாபிலோன், மேதியா-பெர்சியா, கிரேக்கம், ரோம் மற்றும் ரோமைத் தொடர்ந்து வந்த ஐரோப்பிய தேசங்களான வல்லமையுள்ள ராஜ்யங்களின் விழுகையையும் எழுச்சியையும் அடையாளப்படுத்தின. இப்படியாகும் என்று தேவன் சொன்னபிரகாரமாகவே சரித்திரத்தில் நடந்தன என்று உலகப்பிரகாரமான வரலாற்றாசிரியர்களும்கூட இவைகளை உறுதிப்படுத்துகிறார்கள்! அதினாலேயே நாமும் வரவிருக்கும் தேவனுடைய ராஜ்யத்தை

அடையாளப்படுத்துகின்ற சிலையை மோதும் கல் சம்பவமும் நிச்சயமாக நடக்கும் என்பதை அறிகிறோம். அதற்கு நீங்கள் ஆயத்தமா?

## 2 இஸ்ரவேலின் எதிர்காலம் முன்னுரைக்கப்பட்டது

ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு இஸ்ரவேலின் எழுச்சி, அடிமைத்தனம், சிறையிருப்பிலிருந்து திரும்பி வருதல் மற்றும் பிற தேசங்களில் சிதறடிக்கப்படுதல் போன்ற நிகழ்வுகள் தேவன் நிர்ணயித்த நேரத்தில் எழுத்து மாறாமல் நிறைவேறின. உதாரணத்திற்கு, பாபிலோனில் இஸ்ரவேலின் 70-வருட அடிமைதனத்தைக் குறித்து எரேமியா முன்னுரைத்தார். “இந்தத் தேசமெல்லாம் வனாந்தரமும் பாழுமாகும்; இந்த ஜாதிகளோ, எழுபது வருஷமாகப் பாபிலோன் ராஜாவைச் சேவிப்பார்கள்.” (எரேமியா 25:11). கி. மு. 605ல் எருசலேம் பாபிலோனின் கையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. மேலும் 70 வருடங்கள் கழித்து பெர்சியாவின் ராஜாவான கோரேசின் ஆணைக்குப் பிற்பாடு இஸ்ரவேல் ஜனங்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தனர் (எஸ்றா 1:1ஐ படிக்கவும்).

## 3 பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே இயேசு பிறக்கப்போகும் இடத்தின் பெயர் முன்னுரைக்கப்பட்டது

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசியான மீகாவின் புத்தகத்தில், கிறிஸ்துவின் பிறப்பிற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே மேசியா பெத்லகேமில் பிறப்பார் என்று முன்னறிவிக்கப்பட்டது. “எப்பிராத்தா என்னப்பட்ட

பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதிநாட்களாகிய பூர்வத்தினுடையது.'' (மீகா 5:2). முன்னுரைத்தபடியே துல்லியமாக மரியாள் மற்றும் யோசேப்பின் ஊராகிய நாசரேத்திலிருந்து 70 மைல்களுக்கப்பாலுள்ள பெத்லகேமில் இயேசு பிறந்தார். மத்தேயு 2:1 இதை உறுதிப்படுத்துகிறது, ''யூதேயாவிலுள்ள பெத்லகேமில் இயேசு பிறந்தபொழுது, கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்தார்கள்.''

## 4 கழுதையின்மேல் பவனி வரும் ராஜா

மனுக்குலத்தின் மீட்பரானவர் எருசலேமில் நுழைந்தபோது அவருக்கு ராஜரீக ஊர்வலம் இருந்திருக்கும் என நீங்கள் கற்பனை செய்யலாம். ஆனால் சகரியாவோ வித்தியாசமான ஒன்றை முன்னுரைத்தார்: ''இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறி வருகிறவருமாயிருக்கிறார்'' (சகரியா 9:9). ஐந்து நூற்றாண்டுகளுக்குப் பிறகு மாற்கு எழுதின சுவிசேஷத்தில் இவ்வாறு பதிவுசெய்யப்பட்டுள்ளது: ''அவர்கள் அந்தக் குட்டியை இயேசுவினிடத்தில் கொண்டுவந்து, அதின்மேல் தங்கள் வஸ்திரங்களைப் போட்டார்கள்; அவர் அதின்மேல் ஏறிப்போனார்... முன்நடப்பாரும் பின்நடப்பாரும்: ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்... அப்பொழுது, இயேசு எருசலேமுக்குப் போனார்'' (மாற்கு 11:7, 9, 11).

## 5 ஆயிரம் வருடங்களுக்கு முன்னதாகவே சிலுவை மரணம் விவரிக்கப்பட்டது!

சிலுவை மரணம் என்ற ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு நடைமுறையில் செயல்படுத்துவதற்கு ஆயிரமாண்டுகளுக்கு முன்னதாகவே மேசியா சிலுவையிலறையப்படுவார் என்று தாவீது ராஜா முன்னுரைத்தார்: "நாய்கள் என்னைச் சூழ்ந்திருக்கிறது; பொல்லாதவர்களின் கூட்டம் என்னை வளைந்துகொண்டது; என் கைகளையும் என் கால்களையும் உருவக் குத்தினார்கள்" (**சங்கீதம் 22:16**). மத்தேயுவின் சுவிசேஷம் இந்த நிறைவேருதலை பதிவுப்படுத்துகிறது: "அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்…தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது" (**மத்தேயு 27:35**).

## 6 இயேசு வரும்வரை சமாதானம் இல்லை!

கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு சற்று முன்னிருக்கக்கூடிய காலம் இதுவரை இல்லாத கடும் போராட்டமான நேரம் என்று முன்னுரைக்கப்பட்டது. "ஜனத்துக்கு விரோதமாக ஜனமும் ராஜ்யத்துக்கு விரோதமாக ராஜ்யமும் எழும்பும்" என்று இயேசு எச்சரித்தார் (**லூக்கா 21:10**). இருபதாம் நூற்றாண்டில் நடந்த யுத்தத்தில் மட்டும் ஏறத்தாழ 108 மில்லியன் மக்கள் மடிந்தனர் என்று பார்க்கிறோம். கடந்த 3,400 வருடங்களில், மனிதர்கள் சமாதானத்துடன் இருந்தது 268 வருடங்கள் மட்டுமே என்று ஒரு வரலாற்றாசிரியர் கூறுகிறார்.

உலகத்தைக் குறித்த அக்கறையுடன் உலகளாவிய பதற்ற நிலை கொதித்துக்கொண்டிருக்க, அநேகமான தேசங்கள் வெகுஜன அழிவிற்காக ஆயுதங்களை நாடியும் பெற்றுக்கொண்டுமிருக்க, சித்தாந்தம் மற்றும் பேராசையினால் தாக்கப்பட்டதினால் போராட்டங்கள் வந்துகொண்டிருக்க, இயேசு வரும்வரையில் நமக்கு சமாதானம் என்பது இல்லை என்பதை தெரிவிக்கின்றன. "அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை." (மத்தேயு 24:22).

ஆனால் நீங்கள் பயப்படவேண்டியதில்லை! ஏனெனில் இந்தத் தீர்க்கதரிசனங்கள் துல்லியமாக நிறைவேறின என்பது நமக்குத் தெரியும். மேலும் அவர் வாக்குரைத்தபடி அவரை நம்புகிறவர்களை இரட்சிக்க கிறிஸ்து வருவார். "இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக்காண்பார்கள்" (வெளி. 1:7).

இதற்கு நாம் எவ்வாறு ஆயத்தமாகமுடியும்? இதற்கு நாம் "தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளவேண்டுமென்று" (வெளி. 14:12) வேதம் கூறுகிறது. எனவே, உங்கள் வேதத்தை அனுதினம் படித்து தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதற்கு அவருடைய உதவியை நாடுங்கள்!




## இன்னும் தெரிந்துகொள்ள விரும்புகிறீர்களா?

வேதத்திலுள்ள வேறெந்தத் தீர்க்கதரிசனங்கள் எல்லாம் நிறைவேறியுள்ளன? அவை நிறைவேறுவதற்கு வெகுகாலத்திற்கு முன்னமே வேதம் எவ்வாறு அவைகளை முன்னுரைத்தது? ‘குறித்த நேரத்தில் நிறைவேறின தீர்க்கதரிசனங்கள் வெளிப்படுத்தப்பட்டன!’ என்ற வேதபாடத்தில் உங்களை ஆச்சர்யமூட்டும், உள்ளத்தை ஏவும் பதில்கள் உள்ளன! உங்களுக்கான இலவசப் பிரதியை Time18.AFTV.in-ல் இன்றே பதிவிறக்கம் செய்யவும்.

---

AMAZING FACTS India

AmazingFactsIndia.org
Post Box No 51
Banjara Hills, Hyderabad 500034
+91 916 916 4480 | Bookstore.AFTV.in